# கிராம அபிவிருத்தி திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# ග්‍රාම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
# උතුරු පළාත
# DEPARTMENT OF RURAL DEVELOPMENT
# NORTHERN PROVINCE


உமது இல.
ඔබේ අංකය
Your No.

எனது இல.
මගේ අංකය
My No. NP/19/11/Dept/Cir

16.05.2016

*சுற்றுநிருபம் : இல :- 04/2016 கிராம அபிவிருத்தி திணைக்களம் வடக்கு மாகாணம்.*

சகல மாவட்ட உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குமானது.

## கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களிலிருந்து பணவிடுவிப்பு

(1) வடக்கு மாகாணத்தில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயற்படும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலமாக அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் உயரிய நோக்கத்துடன் அரச நிதி வழங்கப்பட்டுள்ளது. சங்கங்களின் செயற்பாடுக்கள் மூலம் மேற்கொள்ளப்படும் வருமான அதிகரிப்பு திட்டங்கள், நுண்கடன் செயற்திட்டங்களின் ஊடாக இவ் ஆரம்பநிதியானது பன்மடங்காக பெருக்கமடைந்து காணப்படுகின்றது. கடந்த காலங்களில் இந்நிதியானது பலராலும் கட்டுப்பாடின்றி கையாளப்பட்டு உரிய நோக்கத்திலிருந்து விலகி, பல வழிகளில் நிதிக்கையாடல் செய்யப்பட்டுள்ளதை திணைக்களம் அவதானித்துள்ளது.

(2) வடக்கு மாகாண கௌரவ முதலமைச்சரின் பணிப்பிற்கமைய கௌரவ கிராம அபிவிருத்தி அமைச்சருடன் இது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் இதனை ஓர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வழங்கப்பட்ட பணிப்புரைக்கமைய, வடக்கு மாகாணத்தில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயற்படுகின்ற கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் யாவும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டு அக் கணக்காய்வு அவதானிப்புக்களின் அடிப்படையில் நிதி நடவடிக்கைகள் சீர்செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் எதிர்வரும் ஆண்டிலிருந்து கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயற்படுகின்ற சகல சங்கங்களிலும் பொதுவான ஓர் கணக்கு வைப்பு முறைமை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்ச்சியான கணக்காய்வினை இலகுபடுத்துவதற்கு வழிவகுக்கும்.


இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.
අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෛප්පන්ති. නල්ලූර්. යාපනය
No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna

பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director: 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office: 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail: nprural@gmail.com

(3) இதற்கேற்ப கீழ் குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் சங்கங்களின் வங்கி கணக்கிலிருந்து அதன் செயற்பாடுகளுக்கு பணவிடுவிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் பணவிடுவிப்புக்கான பொதுவான முறைமை கடைப்பிடிக்கப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும் எனவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

(3.1) ஓர் சங்கத்தின் நிதியிலிருந்த ரூபா 1000.00 (ரூபா ஆயிரம் மட்டும்) விடுவிப்பதற்கான அனுமதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுவதுடன் அத்தொகைக்கு மேற்பட்ட விடுவிப்பிற்கு பணிப்பாளரின் அனுமதி பெறப்படவேண்டும்.

(3.2) சுழற்சி முறை நுண்கடன் நிதியானது அந்நோக்கம் தவிர்ந்த வேறு எந்த செயற்பாடுகளுக்கும் விடுவிக்கப்படலாகாது.

(3.3) ஓர் சங்கம் தான் அமைந்துள்ள கிராமத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதற்கு முன்வருமாயின் அதற்கான தகுந்த நியாயப்படுத்தலுடன் பிரதேச செயலாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் பரிந்துரையுடன் பணிப்பாளரின் அனுமதி பெறப்பட்டே சங்க நிதி விடுவிக்கப்பட வேண்டும்.

(3.4) ஓர் சங்கம் தனது அபிவிருத்திக்கு சங்க நிதியை பயன்படுத்தப்பட வேண்டும் எனின் அதற்கான தகுந்த நியாயப்படுத்தலுடன் பிரதேச செயலாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் பரிந்துரையுடன் பணிப்பாளரின் அனுமதி பெறப்பட்டே சங்க நிதி விடுவிக்கப்பட வேண்டும்.

(3.5) சங்கத்தினது வருமான அதிகரிப்பிற்காக சங்கத்தினால் செயற்படுத்த தீர்மானிக்கப்பட்ட சாத்தியவளமான வாழ்வாதார செயற்பாடுகளுக்கு தகுந்த நியாயப்படுத்தலுடன் பிரதேச செயலாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் பரிந்துரையுடன் பணிப்பாளரின் அனுமதி பெறப்பட்டே சங்க நிதி விடுவிக்கப்பட வேண்டும்.

(3.6) சங்கத்தின் நிதியிலிருந்து மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்கு ((3.3) (3.4) மற்றும் (3.5)) பணம் விடுவிக்கப்படவேண்டுமாயின் விசேட பொதுக்கூட்டம் மூலம் சந்தாப்பணம் செலுத்தும் சகல சங்க அங்கத்தவர்களுக்கும் விபரங்கள் தெளிவுபடுத்தப்பட்டு கூட்ட அறிக்கையுடன் பணவிடுவிப்பிற்கான கோரிக்கை பிரதேச செயலாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் பரிந்துரையுடன் மாவட்ட உத்தியோகத்தர் ஊடாக பணிப்பாளருக்கு சமர்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட வேண்டும்.

இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.
අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෛප්පන්ති. නල්ලූර්. යාපනය
No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna

பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director: 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office: 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail: nprural@gmail.com

(3.7) பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற வேறுதிணைக்களம் சார்ந்த நிகழ்வுகளுக்கு அந்தந்த அரச திணைக்களங்களினால் நிதி ஒதுக்கப்படுவதால் அதற்காக சங்க நிதி வழங்கப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(3.8) பிரதேசத்தில், கிராமத்தில் நிகழும் ஏனைய நியாயப்பாடற்ற சமூக நிகழ்வுகளுக்கு சங்க நிதி வழங்கப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(3.9) மேற்கூறப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் சங்கத்தின் நிதி நடைமுறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். குறித்த நடைமுறைகளுக்கு புறம்பான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள எவருக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன். மேலும் அனர்த்த காலங்களில் மட்டும் இந்நடைமுறைகளில் சூழ்நிலைக்கேற்ப தீர்மானங்கள் மேற்கொள்ளமுடியும்.

(3.10) இச் சுற்றறிக்கையின் விபரங்களை கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் நிர்வாகிகளுக்கு தெளிவுபடுத்தி, வழிப்படுத்தி அவர்களின் ஒத்துழைப்புடன் உரிய நோக்கத்தினை அடைய நடைமுறைப்படுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

(3.11) இச் சுற்றிக்கையில் குறிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் 16.05.2016 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவருகின்றது.

ஜே.ஜே.சி.பெலிசியன்
பணிப்பாளர்
கிராம அபிவிருத்தி
வடக்கு மாகாணம்

ஜே.ஜே.சி. பெலிசியன்
பணிப்பாளர்
கிராம அபிவிருத்தித் திணைக்களம்
வடக்கு மாகாணம்.


இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.
අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෛප්පන්ති. නල්ලූර්. යාපනය
No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna

பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director: 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office: 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail: nprural@gmail.com

உமது இல.
ඔබේ අංකය
Your No.

எனது இல.
මගේ අංකය
My No. NP/19/11/Dept/Cir

பிரதி : 1. கௌரவ அமைச்சரின் பிரத்தியேக செயலாளர், மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப, கிராம அபிவிருத்தி,வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு, வடக்கு மாகாணம். - **தயவுடன் அமைச்சின் தகவலுக்காக.**

2. பிரதம செயலாளர், வடக்கு மாகாணம். - **தயவுடன் தங்களின் தகவலுக்காக.**

3. செயலாளர், மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப, கிராம அபிவிருத்தி,வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு,வடக்கு மாகாணம
- **தயவுடன் தங்களின் தகவலுக்காக.**

4. அரசாங்க அதிபர்......... ............. - **தயவுடன் தங்களின் தகவலுக்காக**

5. உதவி கணக்காய்வாளர் நாயகம், வட பிராந்தியம் . **தயவுடன் தங்களின் தகவலுக்காக.**

6. பிரதம உள்ளக கணக்காய்வாளர் வடக்குமாகாணம். **தயவுடன் தங்களின் தகவலுக்காக.**

7. பிரதேச செயலாளர்.....................................
- **தயவுடன் தங்களின் தகவலுக்காகவும், வழிநடாத்துவதற்காகவும்.**

8. பிரதேச மட்ட சங்கங்களின் சமாசம் - **தயவுடன் தங்களின் தகவலுக்காகவும், சங்கங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி நடைமுறைப்படுத்துவதற்காகவும்.**


இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.

අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෛප්පන්ති. නල්ලූර්. යාපනය

No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna

பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director } 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office } 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail } nprural@gmail.com